

வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதாவை ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட நாடாளுமன்ற கூட்டக் குழு கூட்டம் புதுடெல்லியில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் நாடாளுமன்ற மக்களவை கொறடா ஆ.ராசா பங்கேற்றார்.



தலைமைச் செயலகத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், ஆர். காந்தி தலைமையில் நேற்று, பொங்கல் பண்டிகை, 2025க்கான வேட்டி சேலை வழங்குதல், பள்ளி சீருடை வழங்கும் திட்டம் மற்றும் துறை சார்ந்த இதர திட்டங்கள் முன்னேற்றம் தொடர்பான ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர், திருமதி. வே. அமுதவல்லி, கைத்தறித் துறை இயக்குநர், அ. சண்முக சுந்தரம், துணிநூல் துறை இயக்குநர், திருமதி. இரா. லலிதா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### முதல்வரின் கோரிக்கையையேற்று - சீன லைட்டர்களுக்கு தடைவிதிக்க ஒன்றிய அரசு ஒப்புதல்!

# தமிழ்நாட்டில் இன்னும் பல நூற்றாண்டுகள் தீப்பெட்டித் தொழில் தழைக்கும்!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, அக். 22 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கோரிக்கையை யேற்று சீன லைட்டர்களுக்கு தடைவிதிக்க ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இதனால் தமிழ்நாட்டில் இன்னும் பல நூற்றாண்டுகள் தீப்பெட்டித் தொழில் தழைக்கும் என “தினத்தந்தி” நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியிலும், வேலைவாய்ப்பிலும் தீப்பெட்டி தொழில் முக்கிய இடத்தை வகிக்கிறது. அதுவும் பெண்களுக்கான வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கிறது. தமிழகத்தில், சிவகாசி, சாத்தூர், கோவில்பட்டி, கழுகுமலை, குடியாத்தம், காவிரிப்பட்டினம், தர்மபுரி உள்ளிட்ட பல இடங்களில் தீப்பெட்டி தொழிலே பிரதான தொழிலாக இருக்கிறது. தமிழ்நாட்டில் முன்பு ஆயிரத்துக்கும் மேற்பட்ட தீப்பெட்டி தொழிற்சாலைகள் இருந்த நிலையில், இப்போது 500 ஆக குறைந்துவிட்டது. அதே நேரத்தில், தீப்பெட்டி பண்டல் செய்யும் ஆலைகள் 3 ஆயிரத்துக்கு மேல் இருக்கிறது.

இந்தியாவில் பயன்படுத்தும் தீப்பெட்டிகளில் 95 சதவிதம் தமிழ்நாட்டில்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. மீதமுள்ள 5 சதவிதம் அபாம், உத்தரபிர



தலையங்கம்
தினத்தந்தி
21.10.2024 (திங்கட்கிழமை)
தீப்பெட்டி தொழில் இனி வாழும்!



தேசம் போன்ற மாநிலங்களில் உற்பத்தியாகின்றன. தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் தீப்பெட்டிகள் உள்நாட்டில் மட்டுமல்லாமல், அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா, ஐரோப்பிய நாடுகள், வங்கதேசம், நேபாளம் போன்ற நாடுகளுக்கும் பலத்த போட்டிகளுக்கு மத்தியில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஒரு காலத்தில் தமிழ்நாட்டு தீப்பெட்டிகளைவிட பாகிஸ்தானில் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகள்தான் உலக மார்க்கெட்டில் முதலிடத்தில் இருந்தது. ஆனால், தமிழக தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் கடும் முயற்சி செய்து, தரத்திலும் உயர்ந்து, விலையிலும் அவர்களோடு போட்டியிட்டு முதல் இடத்துக்கு முன்னேறினர்.

தமிழ்நாட்டில் தீப்பெட்டி தொழில் 8 லட்சம் பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு அளிக்கிறது. இங்கு தயாரிக்கப்படும் தீப்பெட்டியின் விலையும் மிகக்குறைவு. இந்த நிலையில், கடந்த 2020ல் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட லைட்டர்கள் இந்த தொழிலை நலிவடைய செய்தது. ஒரு மாதத்துக்கு 50 லட்சம் பண்டல்கள் (ஒரு பண்டலில் (600 தீப்பெட்டிகள் இருக்கும்) உற்பத்தி செய்யப்பட்ட நிலையில், சீன லைட்டர்கள் வரவுக்கு பின் 10 லட்சம் பண்டல்களின் உற்பத்தி குறைந்தது. தொழிலாளர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டது. சில தீப்பெட்டி தொழிற்சாலைகள் மூடப்பட்டன.

இந்த நிலையில், தூத்துக்குடி மாவட்டத்துக்கு சுற்றுப்பயணம் வந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கோவில்பட்டியில் உள்ள ஒரு தீப்பெட்டி தொழிற்சாலையை பார்வையிட்ட நேரத்தில், அங்கு பணியாற்றிய தொழிலாளர்கள், தங்கள் வாழ்வுக்கு ஆப்பு வைக்கும் சீன லைட்டர்களுக்கு தடை விதிக்க மத்திய அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என்று வைத்த கோரிக்கையை, அவரும் உடனடியாக எடுத்தும் சென்றார். முதலமைச்சரின் கோரிக்கையையேற்று ரூ.20க்கும் குறைவான விலையில் விற்பனை செய்யப்படும் சின லைட்டர்களுக்கு மத்திய அரசாங்கம் தடை விதித்தது.

ஆனால், லைட்டர் விற்பனை செய்தவர்கள் இதற்கு மாற்று வழியை கண்டுபிடித்தனர். லைட்டரின் உதிரி பாகங்களை இறக்குமதி செய்து, அதை, லைட்டராக பொருத்தி விற்பனை செய்துவந்தனர். இதனால், தீப்பெட்டி தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் அதிர்ச்சி அடைந்தனர். மீண்டும் மத்திய அரசாங்கத்துக்கு கோரிக்கை விடப்பட்டது. மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமனையும் நேரில் சந்தித்து வலியுறுத்தினர். இந்த கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்த மத்திய அரசாங்கம், சீன லைட்டர்கள் மட்டுமல்லாமல், அதன் உதிரி பாகங்கள் இறக்குமதிக்கும் தடை விதித்துள்ளது. இந்த அறிவிப்பு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் மட்டுமல்லாமல், தொழிலாளர்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பை அளித்துள்ளது. இனி தமிழ்நாட்டில் தீப்பெட்டி தொழில் வாழும், வளரும் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தீப்பெட்டி தொழில் தொடங்கப்பட்டு 101 ஆண்டுகள் ஆகிறது. இன்னும் பல நூற்றாண்டுகள் இந்த தொழில் தழைக்கும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. சிறப்புரை: மதுரவாயல் தெற்கு

# 148வது வட்டக் கழக நிர்வாகிகள் - பாக முகவர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் எஸ்.ரமேஷ்ராஜ் அறிக்கை!

சென்னை, அக்.22-

மதுரவாயல் 148வது வட்ட கழக செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ். ரமேஷ்ராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர் ஆகியோரின் ஆணையின்படி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களின் வழிகாட்டுதலோடு இன்று (22.10.2024 செவ்வாய்க்கிழமை) மாலை 5.30 மணியளவில் 148வது வட்ட நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் கூட்டம் மேட்டுக்குப்பம் லட்சுமி நகர் பிரதான சாலையில் அமைந்துள்ள நம்பியார் மஹாலில் மதுரவாயல் தெற்குப் பகுதி செயலாளர் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு 9, 10 மற்றும் 23, 24 ஆகிய தேதியில் வாக்குச் சாவடி மையங்களில் வாக்காளர் சேர்ப்பு, நீக்கல் மாற்றம் முதலியவை மேற்கொள்ள தேவையான பணிகள் குறித்து ஆலோசனை வழங்க உள்ளார்.

எனவே இக்கூட்டத்திற்கு பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், பல்வேறு அணிகளின் 148-வது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், பாக குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளவும்.

இவ்வாறு வட்ட கழக செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ்.ரமேஷ்ராஜ் அறிக்கையில் கூறியுள்ளார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், பொன்னேரி தொகுதி பார்வையாளர் மற்றும் ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்கள் கலைந்துரையாடல் கூட்டம். மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் முன்னிலை வகித்தார். மாணவரணி துணைச் செயலாளரும் பொன்னேரி தொகுதி பார்வையாளருமான கா.அமுதரசன் 2026 – சட்டமன்ற தேர்தல் குறித்து ஆலோசனைகள் வழங்கினார். இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெ.மூர்த்தி. மு.கதிரவன், எம்.எல்.ரவி, பா.செ.குணசேகரன் பி.வெங்கடாசலபதி, டாக்டர். பரிமளம் விஸ்வநாதன், கே. சுப்பிரமணி ஒன்றிய செயலாளர்கள் ப. சுகுமாறன், எம்.எஸ். கே.ரமேஷ்ராஜ், கா.சு.ஜெகதீசன், ஜி.ரவிக்குமார், ஜி.பி.வெங்கடேசன், க.சு.தமிழ்உதயன், ரோஸ்பொன்னையன், பழவை பி.முத்து, அலவி, தேசராணிதேசப்பன், டி.ஜானகிராமன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

# தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!



தூத்துக்குடி, அக். 22 -

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் பி.கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகள் கூட்டம் 26.10.2024 - சனிக் கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் கலைஞர் அரங்கம், தூத்துக்குடி மாவட்ட அவைத்தலைவர் ஜி.செல்வராஜ் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள அழைக்கிறேன்.

பொருள்: தி.மு.க. மாநில இளைஞரணி செயலாளரும்,

தமிழ்நாடு துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் நவ.27ல் கொண்டாடுவது குறித்து

வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் மற்றும் சிறப்பு முகாம்கள்.

கழக வளர்ச்சிப் பணிகள் - குறித்து.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு!

# முதல்வருக்கு பொது நூலகத் துறை பணியாளர் கழகம் நன்றி!

## மாநிலத் தலைவர் மு.ராஜேஷ்குமார் அறிக்கை !

சென்னை, அக். 22 -

தமிழ்நாடு அரசு பொது நூலகத் துறை பணியாளர் கழகம் சி அண்ட்டி மாநிலத் தலைவர் மு.ராஜேஷ்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு 3% அகவிலைப்படி உயர்வு அறிவித்தவுடன் தமிழ்நாடு அரசு பணியாளர்களுக்கு 3 % (50% ல் இருந்து 53% ) அகவிலைப்படியை உயர்த்தி ஜூலை மாதம் முதல் நிலுவைத் தொகையுடன் வழங்க முதல்வர் அவர்கள் முன் தேதியிட்டு அறிவித்துள்ளார்கள் இதனால் சுமார் 16 லட்சம் அரசு பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஒய்வூதியதாரர்கள் பயனடைகின்றார்கள். 16 லட்சம் பணியாளர் குடும்பங்களின் சார்பாகவும், பொது நூலகத்துறை பணியாளர் கழகம் சி& டி சார்பாகவும் முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம் .

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

## கடலூர் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் தொண்டர் அணியின் கடலூர் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கடலூர் கிழக்கு மாவட்டம்**
**கடலூர் மாநகரம்**

| | |
|---|---|
| **தலைவர் -** | **பி.ஹெர்பர்ட்ஷீலா** 74, புதியசுனாமி நகர், சோனாங்குப்பம், கடலூர்ஒடி, |
| **துணைத் தலைவர் -** | **ர.ரேணுகா** 58, அருந்ததி நகர், மஞ்சக்குப்பம், கடலூர் ஒடி, |
| **அமைப்பாளர் -** | **க.பாரதி** 54, படவட்டம்மன்கோவில் தெரு, புதுப்பாளையம், கடலூர்1, |

**துணை அமைப்பாளர்கள் -** 1)ம.சத்தியா. 19, முத்தையா நகர், திருப்பாப்புலியூர், கடலூர் ஒடி, 2) வி.மஞ்சு. 61, கிளைவ் தெரு, கடலூர் ஒடி, 3) ச.தனலட்சுமி. 8/2, மாரியம்மன்கோயில் தெரு, ஆனைக்குப்பம், கடலூர்1, 4)ஜெ.செல்வி. 144/55, சரங்கு தெரு, கடலூர் ஒடி, 5) கு.லதா . 23, ராமசாமி தெரு, புதுப்பாளையம், கடலூர்1,

**சமூக வலைதள அமைப்பாளர்கள் -** 1) க.பாக்கியவதி. 21, பொன்னன் தெரு, புதுப்பாளையம், கடலூர்1, 2) அ. ஹேமாவதி. 1/1 குண்டுசாலை, செம்மண்டலம், கடலூர்1,

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 21.10.2024

**நாமக்கல் ப.இராணி**
செயலாளர்
தி.மு.க. மகளிர்
தொண்டர் அணி

### தி.மு.க. வர்த்தகர் அணி

## தேனி தெற்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்

தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம் அறிவிப்பு

தேனி தெற்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஜி.கே. பாண்டியன், தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விலகிக் கொண்ட காரணத்தால், அவருக்குப் பதிலாக **எஸ்.அய்யனார்**, (சண்முகசுந்தரபுரம், ஆண்டிப்பட்டி தாலுக்கா, தேனி மாவட்டம்) அவர்கள் தேனி தெற்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட வர்த்தகர் அணி நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 21.10.2024

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர்
தி.மு.க. வர்த்தகர் அணி


